DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1031/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மதிபா | க-பெ | சாலமன் எட்வர்டு |
| ஊர்: | : | செங்கல்பட்டு | | |
| வயது: | : | 46/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | உதவி பேராசிரியை | மாவட்டம் | செங்கல்பட்டு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.04.2026

**எதிரி ஆஜர். செங்கல்பட்டு மாவட்ட முதன்மை மாவட்ட நீதிமன்ற காணொலிகாட்சி அறையில் இருந்து சாட்சியம் அளித்தார்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் செங்கல்பட்டில் வசித்து உதவி பேராசிரியையாக அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு மதுரை அரசு ராஜாஜி மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் போதகராக இருந்த போது 14.01.2019 அன்று காலை 11.35 மணியளவில் காரைக்குடி வடக்கு காவல் நிலைய குற்ற எண். 18/2019 இதச பிரிவுகள் 279, 337 மற்றும் 304(A) என்ற வழக்கில் இறந்த சின்னையா என்பவரின் பிரேதத்தை இறப்பின் காரணம் அறியும் பொருட்டு கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்றுக்கொண்டு மேற்படி நபரின் பிரேதத்தை பெற்று கொண்டு பிரேத பரிசோதனையை காலை 11.40 மணிக்கு ஆரம்பித்தேன்.

உடல் முழுவதும் விரைப்பு தன்மை இருந்தது.

இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள்

1) இடது காலில் மேற் பகுதி உருமாறி காணப்பட்டது அதனை கூறாய்வு செய்து பார்த்தபோது அதன் அடியில் உள்ள எலும்புகள் உடைந்தும் தசைகள் இரத்த நாளங்கள், நரம்புகள், கன்றிய காயத்துடனும் காணப்பட்டது.

2) இடது பக்க முகம் முழுவதும் வீக்கத்துடன் காணப்பட்டது.

3) 2 செ.மீ. x 1 செ.மீ அளவிலான அடர் பழுப்பு நிற சிறாய்ப்பு காயம், இடது கண் அருகில் காணப்பட்டது.

கபாலம் மற்றும் மூளையை கூறாய்வு செய்து பார்த்த போது கீழ் கண்டாவாறு இருந்தது.

10 செ.மீ. x 6 செ.மீ அளவிலான கன்றிய காயம் தலை தோலுக்கு அடியில் இடது முன் உச்சி

பகுதியில் காணப்பட்டது, 8 செ.மீ. x 5 செ.மீ அளவிலான கன்றிய காயம் தலையின் பின் பக்கத்தில் இரண்டு பகுதிகளிலும் காணப்பட்டது. 6 செ.மீ. x 5 செ.மீ x 1 செ.மீ அளவிலான இரத்த கட்டிகள் இடது உச்சி பின் பகுதியில் காணப்பட்டது, 4 செ.மீ. x 3 செ.மீ x 1 செ.மீ அளவிலான இரத்த கட்டிகள் இடது முன் பகுதியில் காணப்பட்டது, பெருமூளை முழுவதும் இரத்த செறிவுடன் காணப்பட்டது, கபால அடிபகுதி எலும்புகள் சுமார் 5 செ.மீ அளவில் மேல் பகுதியிலும், நடுபகுதிலும் உறைந்து காணப்பட்டது.

மார்பகத்தை கூறாய்வுசெய்து பார்த்த போது இடது பக்க விலா எலும்புகள் 4 மற்றும் 5 உடைந்த நிலையிலும் அதை சுற்றி கன்றிய காயங்களும் காணப்பட்டது. இடது மார்பு கூட்டில் சுமார் 150 மில்லி திரவ ரத்தமும் இரத்த கட்டிகளுடன் காணப்பட்டது. வலது மார்பு கூடு காலியாக இருந்தது. பிற பகுதிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை

இறுதி கருத்துவரை

இறந்த நபரானவர் அவருக்கு ஏற்ப்பட்ட பலதரப்பட்ட காயங்களால் இறந்திருக்கலாம் என்று கருத்துரை வழங்கினேன். நான் வழங்கிய **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.4**.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இறந்தவரின் வயது என்ன என்றால் 68 ஆகும். அதிர்ச்சியினால் கீழே விலுந்தால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்புள்ளது என்றால் தவறி விழுந்ததால் நான் சொன்ன அளவிற்கு காங்கள் ஏற்படாது ஆனால் வாய்ப்பு உள்ளது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.07 11:52:16 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.